

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ”நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் நடைபயிற்சியை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் மகேந்திரா வோர்ல்டு சிட்டி நுழைவாயிலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் 8kmகொண்ட நடைப்பாதை நடைப்பயிற்சியை கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ். பாலாஜி, து.மூர்த்தி, நகரமன்ற தலைவர் ஜெ.சண்முகம், ஒன்றியக்குழுத் தலைவர் உதயா கருணாகரன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பரணிதரன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அலுவலர் எஸ்.ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான ”வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் ” ஒரு பகுதியாக நேற்று (4.11.2023) சென்னை, நம்மாழ்வார்பேடை, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் வடசென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ”திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் அமைப்பது தொடர்பாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான.பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் .சரிதா மகேஷ் குமார் , கல்லூரி முதல்வர் திருமதி.பெ.பவானி உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### “நீட் விலக்கு, நம் இலக்கு” இயக்கத்திற்காக

# தொழிலாளர்களிடம் ஆயிரக்கணக்கில் கையெழுத்து பெறுவோம்!

## பி.டி.சி.ஜி. செல்வராஜ் அறிக்கை!

சென்னை, நவ.5 -

“நீட் விலக்கு, நம் இலக்கு” என்ற ‘மாபெரும் மக்கள் கையெழுத்து இயக்கத்தை’ மாநில தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தொழிற்சாலைகளில் பணியாற்றிடும் தொழிலாளர்களிடம் கையெழுத்து பெற்று, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றுவோம் என்று

தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

“நீட்” தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் - மாண்புமிகு அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் “நீட் விலக்கு, நம் இலக்கு” எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை 21.10.2023 அன்று காலை சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடக்கி வைத்து முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்.

நீட் தேர்வு விலக்கினை மக்கள் போராட்டமாக மாற்றும் வகையில், இக்கையெழுத்து இயக்கத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக, தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமம் முதல் பட்டணக்கரை கொண்டு சென்றிட வேண்டுமென கடந்த 23.10.2023 அன்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், நடைபெற்ற அனைத்து அணிச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் நடைபெற்று வரும் “நீட் விலக்கு, நம் இலக்கு!” ‘மாபெரும் மக்கள் கையெழுத்து இயக்கத்தை’ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிலாளர்களிடத்திலும் கொண்டு சேர்க்கும் வண்ணம், மாநில தி.மு.க. தொழிலாளர் அணிச் சார்பில் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் பணியாற்றிடும் தொழிலாளர்களிடம் “நீட் விலக்கு, நம் இலக்கு!” விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்தை தி.மு.க. தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பெற்று, அதனை முறைப்படி மாநில இளைஞர் அணி அலுவலகத்தில் ஒப்படைத்து, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றுவதோடு, அவரது கரத்தை பலப்படுத்துவோம் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கே.கருணாகரன், சி.மூர்த்தி, சீ.பாலாஜி முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி 17-வது வட்டத்தில் வாக்காளர் சரிபார்க்கும் பணி!

## புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, நவ.5-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 17-வது வட்டத்தில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், சிறப்பு முகாம், வடபெரும்பாக்கம் ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி மற்றும் சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் இந்த சிறப்பு முகாம்களில், தவறாமல் கலந்து கொண்டு வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தம், இடமாற்றம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று, கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்தில் வாக்காளர் சரி பார்க்கும் பணி தீவிரமாக நடைபெற்றது.

இந்த முகாமில் வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள வருகை தந்த பொதுமக்களிடத்தில், அதற்குரிய மனுக்களை வழங்கி பூர்த்தி செய்து முறையாக வாக்குச்சாவடி அலுவலரிடம் வழங்கும் பணியில்,17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்ட துணைச் செயலாளர் சி. பாலாஜி, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

மேற்படி பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரடியாக சென்று ஆய்வு செய்து பணியை துரிதப்படுத்தினார்.

இந்த முகாம்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திமுகவினர் செயல்பட்டது பாராட்டு வகையில் இருந்ததாக பொதுமக்கள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமில், கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சி. அருணாச்சலம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம் .என் .அஜய் தென்னவன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ் .சிவக்குமார், முன்னாள் கிளை செயலாளர்கள் ஜி. செல்வம், ஜி. முனிவேல் , எம். மைக்கேல் ,பி. செந்தில் ,இ .கார்த்திக. கமலநாதன், வழக்கறிஞர் எம். என். தளபதி,

தீயம்பாக்கம் சென்னை மாநகராட்சி துவக்க பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமில், பாக முகவர்கள் கே. சண்முகபிரியன், வி.சுமீர் கழக நிர்வாகிகள் எம். ஜான்சன், இ.சுதர்சன், பூபாலன், விஜய், ஜோசப், சந்தோஷ் மற்றும் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டார்கள்.

### பெருங்களத்தூர் வடக்குப் பகுதி

# 50வது வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

## கழகத்தினர் பங்கேற்பு!

தாம்பரம், நவ.5-

தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ ஆணைக்கிணங்க பகுதி கழக செயலாளர், 4 மண்டல குழு தலைவர் டி.காமராஜ் வழிகாட்டுதலின்படி 50-வது வட்ட பகுதி கழக துணை செயலாளர்கள் ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் இரா.செல்வகுமார் ஆகியோரின் தலைமையில் நேற்று காலை முதல் தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 50வது வட்டத்தில் அமைந்துள்ள அவ்வை பள்ளியில் உள்ள வாக்கு சாவடி பாகம் 25, 26, 27 சேவசதன் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் பாகம் 30, 31, 32, 33, 34, 35, 36, வள்ளுவர்குருகுலம் 37, 38, 171 ஆகிய பள்ளிகளில் உள்ள வாக்கு சாவடி முகாம்களில் பகுதி வட்ட கழக நிர்வாகிகள் வருகை தரும் பொது மக்கள் அமர்ந்திட நாற்காலி மேசை டேபில் அமைந்து வருகின்ற வாக்களார்களை அமர்ந்திட வைத்து தாம்பரம் மாநகரம் மற்றும் பகுதி கழகத்தின் சார்பில் அவர்களை வாக்களராக சேர்த்திட உதவி செய்து களப்பணி மேற்கொண்டனர்.

இதில் மாநகர மீனவரணி துணை செயலாளர் எஸ்.செல்வம், மாநகர இலக்கிய அணி துணை அமைப்பாளர் சித்திரம் வாசுதேவன் மற்றும் வட்ட கழக பிரிதிநிதிகள் பி.காளியப்பன், வாட்டர் பி.மோகன், கடப்பேரி கே.ராஜன், எம்.தாஸ், வட்ட துணை செயலாளர் ஆர்.கமலநாதன், கழக முன்னோடிகள் எம்.நாகராஜ், பி. சந்தனம், வே.குருமணி, டி.அரவிந்தன், தமிழன் ஆர்.ஹரி, கடப்பேரி மேகநாதன், கடபேரி லோகநாதன் மற்றும் பகுதி வட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்திட கழக தோழர்கள் தங்களை முழுமையான தேர்தல் களப்பணியில் ஈடுபட்டனர்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் சிறப்பு முகாம் கண்காணிப்பு குழு!

மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வருகிற நவம்பர் 4 (சனிக்கிழமை), நவம்பர் 5 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் நவம்பர் 18 (சனிக்கிழமை), நவம்பர் 19 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்கள் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களை கண்காணிக்க கீழ்க்கண்டவாறு கண்காணிப்பு குழு நியமிக்கப்படுகிறது.

### திருத்தணி சட்டமன்ற தொகுதி

| ஒன்றியம்/நகரம்/பேரூர் | கண்காணிப்பு குழுவில் ஈடுபட உள்ள அணிகள் விவரம் |
|---|---|
| திருத்தணி கிழக்கு ஒன்றியம் | - தகவல் தொழில்நுட்ப அணி & மருத்துவ அணி |
| திருத்தணி மேற்கு ஒன்றியம் | - நெசவாளர் அணி & சிறுபான்மை பிரிவு அணி |
| திருத்தணி நகரம் | - இளைஞர் அணி |
| ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றியம் | - மாணவர் அணி |
| ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியம் | - அமைப்புசாரா ஓட்டுநர் அணி |
| பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | - விளையாட்டு மேம்பாட்டு அணி |
| பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | - அயலக அணி & கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி |
| பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | - ஆதிதிராவிட நலக்குழு அணி |
| பள்ளிப்பட்டு பேரூர் | - இலக்கிய அணி |
| பொதட்டூர்பேட்டை பேரூர் | - விவசாய தொழிலாளர் அணி |
| திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | - வழக்கறிஞர் அணி |

### திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி

| ஒன்றியம்/நகரம்/பேரூர் | கண்காணிப்பு குழுவில் ஈடுபட உள்ள அணிகள் விவரம் |
|---|---|
| திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் | - பொறியாளர் அணி |
| திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | - வழக்கறிஞர் அணி |
| கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | - மகளிர் தொண்டர் அணி & மீனவர் அணி |
| கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | - விவசாய அணி |
| பூண்டி மேற்கு ஒன்றியம் | - வர்த்தகர் அணி & தொண்டர் அணி |
| திருவள்ளூர் நகரம் | - மகளிர் அணி |
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் (சேலை ஊராட்சி மட்டும்) | - சுற்றுச்சூழல் அணி |

அதுசமயம் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் இணைந்து சிறப்பு முகாம்களில் ஈடுபட உள்ளனர். மேற்கண்ட அணிகளின் நிர்வாகிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுடன் இணைந்து மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு முகாம்களில் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், இடமாற்றம் உள்ளிட்ட சரிபார்ப்பு பணிகளை மேற்கொண்டு முகாம்களில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் படிவங்கள் குறித்த முழு விவரங்களை மாவட்ட கழகத்திற்கு புகைப்படத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்** எம்.எல்.ஏ.

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### குன்றத்தூர் முன்னாள் பேரூர் செயலாளர்

# மொழிப்போர் வீரர் மாணிக்கம் மறைவு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் அஞ்சலி



காஞ்சிபுரம், நவ. 5 -குன்றத்தூர் பேரூர் கழக முன்னாள் செயலாளர், மொழிப்போர் வீரர் டி.எஸ்.மாணிக்கம் (வயது91) அவர்கள் சில நாட்கள் நலிவுற்று, வயது மூப்பால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவர் 1989 முதல் 1993 வரை 7 ஆண்டு காலம் குன்றத்தூர் பேரூர் செயலாளராக கழகப் பணியாற்றினார். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறை சென்ற மொழிப்போர் வீரர் இவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

இவரது மறைவுச் செய்தி அறிந்தவுடன், காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், குன்றத்தூரில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

முன்னாள் பேரூராட்சித் தலைவர் டி.கே.குமாரசாமி, கழக முன்னோடி டி.எஸ்.கலைச்செல்வன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் நகர செயலாளர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, நகராட்சி துணைத் தலைவர் டி.திருநாவுக்கரசு, குன்றத்தூர் நகர அவைத் தலைவர் எம்.சங்கர், நகர துணைச் செயலாளர்கள் என்.கருணாநிதி, கந்தசாமி, அபிபுன்னிசா, நகர பொருளாளர் டி.என். அருள்மொழி, மாவட்டப் பிரதிநிதி குணசேகரன், சிதம்பரம், ஜெ.மணிமாறன், வார்டு கழக செயலாளர் ப.ராஜேந்திரன், வார்டு நகரமன்ற உறுப்பினர் லட்சுமி சுரேஷ் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மும்பை வி.தேவதாசன்

### நவம்பர் 5 (2019)



இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது, அதில் இணைத்துக் கொண்டதோடு, 1951–ல் மும்பையில் குடியேறி, அம்மாநில கழக முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக, தான் வசித்து வந்த பாண்டுப் பகுதியில் கிளைக் கழகத்தைத்துவக்கி, அதன் செயலாளராக பணியாற்றத் தொடங்கி, மும்பை புறநகர் மாநிலக் கழகத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.

மும்பையில் திருவள்ளுவர் மன்றம் தொடங்கி, அதன் மூலம் தமிழ் வளரப் பாடுபட்டதோடு, திருவள்ளுவர் சிலையினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் கொண்டு திறந்து வைத்ததோடு, கலைஞரின் ‘குறளோவியத்தை’ இந்தி மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.

2018ஆம் ஆண்டு நடந்த முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பெரியார் விருது’ பெற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு (0311.23) அன்று திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி (கி) மாநகர வழக்கறிஞர் அணிகளின் சார்பாக சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி பொன்மலைப்பட்டி ரீராம் மகாலில் நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. உடன் கழக சட்ட திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., மாநகர செயலாளர் மு.மதிவாணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், கே.ஏ.வி. தினகரன், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன், மாவட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், சட்ட கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்